ஞாலகுருவின் படைப்புக்கள்

# இ.ம.இ. - அ.வி.தி
# கொள்கை விளக்கம்



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணைடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு **43,73,122** தை மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை ரூ.10

# உள்ளுறை

1. **“இ.ம.இ.யும் அ.வி.தி.யும் தனித்துச் செயல்படல்”** - குருதேவர் ஞாலாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் 6-12-1986இல் அனைத்து மாணாக்கர்களுக்கும் இந்து மறுமலர்ச்சி இயக்கமும், அருட்பணி விரிவாக்கத் திட்டமும் இரு வேறு நிறுவனங்களாகச் செயல்பட ஒப்புதல் அளித்து விளக்கங்கள் தந்த கட்டுரை.
2. **“செயல்விளக்கத் திருவோலை”** - 30-11-1986இல் குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் இராசிபுரத்துச் சித்தரடியானுக்கு எழுதிய மடலின் நகல். வழிபடு நிலையங்களிலும், தனியார் இடங்களிலும் அருட்பணி ஆற்ற வேண்டிய விதங்களை விளக்கி வரைந்த மடல் இது.
3. **“இ.ம.இ. - அ.வி.தி. கொள்கை விளக்கம்”** - இந்து மறுமலர்ச்சி இயக்கச் செயல்வீரர்களும், அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரர்களும் எப்படியெப்படிச் செயல்பட வேண்டும் என்பதை விவரித்து 12-12-1986இல் இராசிபுரம் வட்டாரச் சித்தரடியானுக்கு குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் வரைந்த மடலின் நகல்.
4. **“திருவோலை”** - 31-12-1986இல் குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் மாட்டுவேலன்பட்டி சித்தரடியானை தம்மோடு இணைந்து செயல்பட ஊக்கம் தந்து வரைந்த மடலின் நகல்.

செம்பியம்,
6-12-86.

# இ.ம.இ.யும் அ.வி.தி.யும் தனித்துச் செயல்படல்

1) நம்மவர்கள் **இ**ந்து **ம**றுமலர்ச்சி **இ**யக்கம் (**இ.ம.இ.**) என்பது ஆரம்பநிலைதான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாத்திகர்களும், கடவுள் மறுப்புப் பகுத்தறிவாளர்களும், மதத்தில் ஆர்வமில்லாதவர்களும், நம்பிக்கையில்லாதவர்களும், மாற்று மதத்தவர்களும் அரசியல் மறுமலர்ச்சிக்காகவும், பொருளாதாரப் புரட்சிக்காகவும், பண்பாட்டுப் புரட்சிக்காகவும் ஒன்று சேருகின்ற ஒரு கட்சியேயாகும்.

2) இ.ம.இ.யில் இருப்பவர்கள் சன்னிதான உடையோ, சிவப்பு ஆடையோ அணிய வேண்டுமென்பது கட்டாயமில்லை. ஆனால், **அ**ருட்பணி **வி**ரிவாக்கத் **தி**ட்டம் (**அ.வி.தி.**) பற்றி முழுமையாகத் தெரிந்தவர்களாகவும்; அன்றாடம் ஒருவேளையாவது அவரவர் வசதி வாய்ப்பு விருப்பம் போல் சிவபுராணம், அருட்சினை மந்திறம், காயந்திரி மந்தரம், மந்திரம் ஓதிப் பூசைகளைச் செய்து சத்திகளைப் பெற்றேயாக வேண்டும்.

3) இ.ம.இ.க்காக படிப்பகங்கள், மன்றங்கள், கலைநிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், விழாக்கள், அவரவர் விருப்பப்படி கவிஞர்களின் பெயராலோ அல்லது சமுதாயத் தலைவர்களின் பெயராலோ அல்லது காலஞ்சென்ற அரசியல் தலைவர்களின் பெயராலோ நிறுவனங்களை அவரவர் வட்டாரத்தில் துவக்கிக் கொள்ளட்டும்.

குறிப்பிட்டவர்களின் நினைவுநாள் கொண்டாடப்படல் வேண்டும். திருமணம், கோயில் திருவிழா, கல்விச் சாலைகளின் விழா முதலியவற்றில் தமிழ்மொழி, இனம், நாடு, வரலாறு, பண்பாடு, மதம், இலக்கியம், புகழ்மிக்க தலைவர்கள் முதலியவைகள் பற்றிய கருத்துக்களைப் பரப்ப வேண்டும். இதில் நமது அச்சிட்ட வெளியீடுகளைப் படித்து கருத்துக்களைத் தேர்ந்தெடுத்துப் பேசுதல் நல்லது.

4) இ.ம.இ.க்காக நமது கையெழுத்துப் பிறதிகளை நகலெடுக்கும் இடம் (அல்லது படிப்பகம்) அலுவலகமாக அந்தந்த வட்டாரத்தில் அறிவிக்கப்படல் வேண்டும். பொதுமக்கள் பார்வைக்காகவும், விற்பனைக்காகவும் நமது வெளியீடுகளை அங்கு வைக்க வேண்டும்.

5) இ.ம.இ. பொதுக் கூட்டங்களிலும், நண்பர்களுடைய உரையாடல்களிலும், ஊழியர் கூட்டங்களிலும், அ.வி.தி. கருத்துக்களையோ, சித்தாந்தங்களையோ பேசத் தேவையில்லை. ஆனால், **மெய்யான இந்துமதம்** - *பொய்யான ஹிந்துமதம்*, தமிழ்மொழி, இலக்கியம், நாயன்மார்கள் ஆழ்வார்கள் வரலாறு, கோயில்கள் வரலாறு, நமது கலைகள் பற்றிய சிறப்பு, ... முதலியவைகளைத்தான் நன்கு விளக்கியுரைக்க வேண்டும். இதனால், தமிழர்களின் சுயமரியாதை, தன்மானம், இனமானம், இனப்பற்று, இனஒற்றுமை, இனவிடுதலை, மொழிப்பற்று, மொழியுரிமை, மொழிவிடுதலை, ... முதலியவை தட்டியெழுப்பப்பட்டு புதிய சமுதாயக் கட்டுக்கோப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

இதனால், விரைவில் இ.ம.இ. ஒரு மாபெரும் அரசியல் இயக்கமாக உருவாக வேண்டும். அனேகமாக வருகிற தேர்தலில் இ.ம.இ. நேரடியாக ஈடுபட வேண்டும். எனவே, அனைத்து

வகையான கட்சிகளையும் சேர்ந்தவர்களை தமிழ்மொழியின் பெயரால் தமிழனின் மதமான பதினெண்சித்தர்களின் தத்துவத்தின் பெயரால் ஒன்று திரட்டியேயாக வேண்டும். அதாவது மொழியுணர்வும், மதவுணர்வும்தான் இ.ம.இ.யின் விழிகள். எனவே, அந்தந்த வட்டாரத்தார் இ.ம.இ. உறுப்பினர் இரசீதுப் புத்தகம் அடித்து ஆண்டுச் சந்தாவாக ரூ.1/- பெற்றுக் குறைந்தது ஒன்பது பேர் முதல் 25 பேர் வரை ஒரு கிளைக் கழகத்திற்குத் தேவை என்ற விதியின்படி கிளைக் கழகங்களைத் தோற்றுவிக்க வேண்டும். இதில் மிகுந்த வேகமும் அக்கரையும் பொறுப்பும் காட்ட வேண்டும். இ.ம.இ. கொடி அரசியல் கட்சிகளின் கொடி போல் பொது இடங்களில் ஏற்றப்படல் வேண்டும். இ.ம.இ. தலைவர்கள் அ.வி.தி. பணியை மறந்து முழுக்க முழுக்க இ.ம.இ. பணியில் மட்டும் ஈடுபட்டால் போதும்.

6) இ.ம.இ. உடனடியாக நேரடியாக அரசியலில் ஈடுபட வேண்டாம். ஆனால், அனைத்து வகையான அரசியல் விமரிசனங்களையும் வழங்கி எல்லா அரசியல் கட்சியினர்களையும் இ.ம.இ.யில் உறுப்பினர்களாக்க வேண்டும். ஏனென்றால் இ.ம.இ.தான் தமிழரின் கட்சி; தமிழர்களின் உரிமைகளையும், பெருமைகளையும் மீட்டுத் தரும் ஒரே கட்சி.

7) இ.ம.இ.யைச் சேர்ந்தவர்கள் தங்களால் இயன்ற எல்லாவிதமான உதவிகளையும், பாதுகாப்புக்களையும் அ.வி.தி.க்கு வழங்க வேண்டும் என்ற கடமையுணர்வோடு செயல்பட வேண்டும். அ.வி.தி.யினால் இ.ம.இ. பணி கெட்டுப் போய்விட்டது என்று கூறக் கூடாது. இ.ம.இ.க்கு அ.வி.தி.தான் உயிர்நாடி என்ற உணர்வும் உண்மையும் இயக்கச் செயல்வீரர்களிடம் இருந்தால் போதும். இருவரும்

அடிக்கடி கலந்து பேசித்தான் செயல்திட்டங்களை உருவாக்கிச் செயல்பட வேண்டும்.

8) அரசியல் கட்சிகள் போல் அந்தந்த வட்டாரத்தில் பொதுக்கூட்டங்கள் போட வேண்டும். இலக்கியக் கழகங்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

9) அ.வி.தி. உறுப்பினர்கள் பழங்காலத்திலிருந்து பழக்கத்தில் இருந்துவரும் பசனை மடங்களை நம்முடைய வார வழிபாட்டுக் கூடங்களாக ஆக்க வேண்டும். சைவம், வைணவம் என்ற வேறுபாடுகள் இருக்கக் கூடாது. இசைக்கருவிகளோடு நமது பூசாமொழிகள் பசனை மடங்களில் ஒலிக்க வேண்டும். எனவே, பசனை மடங்கள் இல்லாத இடங்களில் ஏதேனும் ஒரு கோயிலில் இசைக்கருவிகளோடு பசனைப்பாடல்களாக நமது பூசாமொழிகள் ஒலிக்க வேண்டும். இதில் அ.வி.தி. பணி நடத்தப்படக் கூடாது.

10) கோயில்களைப் புத்துயிர்ப்புச் செய்தல், அ.வி.தி. நிலையத்தில் அருள் வழங்குதல், சுடுகாடுகளில் பரிகாரப் பூசை செய்தல் முதலியவை முழுக்கச் சன்னிதான உடையில் ஒருவராவது இருந்து செய்ய வேண்டும். இதற்காக ஆர்வமுள்ளவர்களுக்கு எல்லாம் அருட்பட்டங்கள் வழங்கிச் சன்னிதானமாகச் செயல்படச் செய்யுங்கள்.

11) அ.வி.தி. பணி நடக்கின்ற இடங்களில் இ.ம.இ. பற்றிப் பேசவே கூடாது. நமது சமயாச்சாரியார்கள், சந்தாணுச்சாரியார்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், புராண இதிகாசங்கள், பூசைமுறைகள் பற்றித்தான் பேச வேண்டும்.

12) அ.வி.தி. பணியில் நன்கு அருட்கணிப்புச் செய்துதான் அருள் வழங்க வேண்டும். நலமாகாது அல்லது நெடுநாட்கள்

கழித்துத்தான் நலமாகும் என்கின்ற வழக்குகளைக் குருதேவருக்குத் தெரிவித்து ஒப்புதல் பெற்றுத்தான் அருள் வழங்க வேண்டும். எச்சரிக்கை! **குருவாணை!**

13) ஒவ்வொரு அ.வி.தி. செயல்வீரரும் ஒரு நோட்டுப் புத்தகம் வைத்துக் கொண்டு தங்களுடைய பணிகளை முழுமையாகக் குறிக்க வேண்டும். தங்களால் அருள்நலம் பெறுபவர்களின் முழு முகவரியையும், வழக்கு பற்றிய முழு விவரங்களையும் தெளிவாகக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். நோயாளிகளிடம் அட்டை ஒன்று வழங்கி வழக்குப் பற்றியும், அவர்கள் எத்தனை வாரம் வரவேண்டும் என்பது பற்றியும் குறித்துத் தந்திட வேண்டும்.

14) அ.வி.தி.யில் பூசாறி, குருக்கள், அருட்சகர், மருளாளி, சோதிடர், குறிகாரர்,... என்பவர்களையெல்லாம் நேரடியாக உறுப்பினராக்கி ஒரு மாநில அமைப்பை உருவாக்க வேண்டும். இதேபோல் பத்தியுள்ளவர்களையெல்லாம் **க**டவுளை **வ**ழிபடுவோர் **க**ழகத்தில் (**க.வ.க.**) சேர்த்து மாநில அமைப்பை உருவாக்க வேண்டும். இவர்கள் சன்னிதானமாக மாற வேண்டும் என்பது அவசியமில்லை.

15) எந்தக் காரணத்தை முன்னிட்டும் நம்மவர்கள் சாயிபாபா, பங்காரு அடிகளார், பன்றிமலை சாமிகள், இராகவேந்திரர், இராமலிங்க அடிகளார், இராமகிருட்டிணர் முதலியவர்களின் பெயர்களால் உள்ள அமைப்புக்களையோ, நிறுவனங்களையோ விமரிசிக்கக் கூடாது. எச்சரிக்கை, **குருவாணை**. கூடுமானவரை மத இயக்கங்களோடும், நிறுவனங்களோடும் இணைந்து செயல்பட வேண்டும். யார் மனதையும் புண்படுத்தக் கூடாது. எச்சரிக்கை.

16) எல்லா மதத்தவர்களுக்கும் அருள்வழங்க வேண்டுமென்பதால் அவரவர் மதத்திற்குரிய படங்களையோ, சின்னங்களையோ கொண்டு வரச் சொல்லி அருளேற்றிக் கொடுக்க வேண்டும். 'அனைத்து மதங்களும் சித்தர்நெறி எனும் தோட்டத்தில் பூத்த மலர்களே! கனிந்த கனிகளே!' என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

17) அ.வி.தி. உறுப்பினர்கள் அனைவரும் சமமே. அனைவரும் குருவின் பதிலிகளே. யாரும் யாரையும் பழியாகவோ, இழிவாகவோ, பகையாகவோ, நகையாகவோ கருதக் கூடாது, பேசக் கூடாது. அதாவது மரியாதை கலந்த பற்றும், ஒற்றுமையும், கட்டுப்பாடும் அ.வி.தி. உறுப்பினர்களிடம் இருக்க வேண்டும்.

**குருவாணை!**

**அருளாட்சி நாயகம், குவலய குருபீடம்,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**
6-12-1986.

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: மதுரைச் சித்தரடியான் NS சாமிநாதன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# செயல் விளக்கத் திட்டம்

**[சித்தரடியான் கங்காதரக் குமார் தலைமைப்பீடத்திற்கு நேரில் வந்து கேட்டதற்குப் பதில்]**

1) எங்குச் சென்றாலும் மிகுந்த நம்பிக்கைக்குரியவர்களை மட்டும்தான் அழைத்துச் செல்ல வேண்டும். நம்முடைய இரகசியங்களைக் காப்பாற்றுபவர்களாகத்தான் பார்த்து அழைத்துச் செல்ல வேண்டும். தற்காப்புக்காக நம்பிக்கையுள்ள பெண்கள் இரண்டு பேராவது இருந்தால்தான் அ.வி.தி. பயணங்கள் செய்யலாம்.

2) சந்தர்ப்பச் சூழ்நிலைகளைப் பொறுத்தே பூசைகளைப் பகலில் அல்லது இரவில் செய்ய வேண்டும். பலிகொடுப்பதோ, சமைத்த படையல் பொருட்களை விலைக்கு வாங்கிப் படைப்பதோ சந்தர்ப்பச் சூழ்நிலைகளைப் பொறுத்துத் தீர்மானித்துக் கொள்க.

3) பூசையில் பயன்படுத்துகின்ற பூசாமொழிகள் உடலும், உள்ளமும் தாங்குவதற்கேற்ப அவரவர் முடிவெடுக்கப்பட வேண்டியவையே.

4) புதிய இடங்களுக்குச் சென்று யாகம், பூசை செய்வதென்றால் ஒரு திரிசூலம், ஒரு வேல், இரும்பு அகல்விளக்கு ஆகியவற்றைத் தரையில் ஊன்றி வைத்து விட்டுத்தான் பூசை செய்ய வேண்டும்.

5) பூசை நேரத்தில் மட்டுமே சன்னிதான உடையணிய முடியும் என்றிருப்பவர்கள் அப்படிச் செயல்படலாம். இ.ம.இ.யில் முழுக்க முழுக்கச் செயல்பட விரும்புபவர்கள் தங்களுடைய விருப்பத்திற்கேற்ப உடைகளை அணிந்து கொள்ளலாம். ஆனால், ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய வீட்டில் செய்யக்கூடிய பூசைகளின் போது சன்னிதான உடையணிந்து பூசை செய்தால்தான் சித்திகளைப் பெறமுடியும்.

6) பரிகாரத்திற்கு வருகிறவர்களை வாராவாரம் வியாழக் கிழமை காலையில் அவரவர்க்கு வசதிப்பட்ட சுடலையிலோ, புதைகாட்டிலோ ஒரு திரிசூலம் ஊன்றி விளக்கு மாடம் கட்டி தாங்களே சென்று சர்க்கரைப் பொங்கல், கொண்டைக்கடலைச் சுண்டல் படைத்து அதை குழந்தைகளுக்கெல்லாம் கொடுத்து விட்டுச் செல்லலாம். தாங்களும் அதை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம். அல்லது அங்கேயே உண்டுவிட்டுச் செல்லலாம். யார் பரிகாரத்திற்கு வந்தாலும் அவர்கள் உயரத்திற்கு திரிசூலம் செய்து சுடலையில் புதைக்கச் சொல்ல வேண்டும். கூட்டமாக வியாழக் கிழமை காலையில் பலரும் அவரவர்க்கருகில் உள்ள சுடுகாட்டில் பூசாமொழியைப் படித்துக் கூட்டு வழிபாடு செய்ய வேண்டும். யாராக இருந்தாலும் குறைந்தது 11 வாரம், 18 வாரம் கூட்டு வழிபாட்டில் சுடலையில் கலந்து கொள்ள வேண்டும்.

7) பெண்களுக்குள்ள பாதிப்புக்கள் அனைத்துக்கும் வெள்ளிக் கிழமையில் இராகுகாலத்தில் மாரியம்மன் கோயிலில் எல்லோரையும் தொடர்ந்து 9 வாரம் எலுமிச்சம்பழ விளக்குப் போட வேண்டும். மிகவும் சிக்கலாக உள்ளவர்களுக்கு கணக்கேயில்லாமல் தொடர்ந்து விளக்குப் போட வேண்டும். சிவபுராணம் பாடிப் பூசையை ஆரம்பிக்க வேண்டும். பிறகு அது எந்தக் கோயிலோ அந்தக் கோயிலில் உள்ள வழிபடு நிலையினருக்கேற்ப காளி, மாரி, ... காயந்திரி கூற வேண்டும். பூசை முடிவில் காயந்திரி மந்தரம், மந்திரம், அருட்சினை மந்திறம் ஆகியன 9 முறை கூறிப் பூசையை முடிக்க வேண்டும்.

8) கொங்கணச் சித்தர் சமாதியில் தீமைகளை அழிக்கக் கூடிய அழிவுச் சத்தியே அதிகம் உண்டாக்க முடியும். எனவே, யார் யார் பாதிக்கப்பட்டவர்களோ அல்லது யார் யாருக்குப் பரிகாரம் தேவைப்படுகிறதோ அவர்கள் வாராவாரம் 11¼ ரூபாய் அங்கு பூசைக்கு வரும் சன்னிதானத்திடமோ அல்லது நேரடியாக

குருதேவருக்கு அனுப்பியோ பூசைக்குரிய அருளூறு பூசனைப் பொருட்கள் பெற்றுத் தங்களுடைய குறைகளை ஐந்து வெற்றிலைகளில் எழுதி யாகத்தீயில் போட வேண்டும். அதாவது மஞ்சள், சுண்ணும்பு ஆகியவற்றை குழைத்து சுண்டு விரலால் தொட்டு வெற்றிலைகளில் எழுதி குருதேவரிடமிருந்து வரும் மஞ்சள், சுண்ணும்பை அதில் தூவி வெற்றிலையை மடித்து யாகத்தீயில் போடவேண்டும். குழைத்து எழுதுவதற்கு மஞ்சள் சுண்ணும்பு முதலியன சன்னிதானங்களிடமிருந்து மந்திரித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறைகளைக் காணிக்கைப் பணத்துடன் குருதேவருக்கு அனுப்பிட வேண்டும். மொத்தமாக 11 வாரங்களுக்குக் காணிக்கை அனுப்புவதாக இருந்தாலும் சரி அல்லது வாராவாரம் காணிக்கை 11 வாரங்களுக்கும் அனுப்புவதாக இருந்தாலும் சரியே.

9) குருதேவர் சேலம் வட்டாரச் சுற்றுப்பயணம் வருகையில் இளம்பிள்ளையில் சிறிது நேரம் இருந்து பார்வையிட ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வட்டார மக்களுக்கு அறிவிப்புச் செய்து குருதேவர் வருகையை விளம்பரப் படுத்திட வேண்டும். இதேபோல் செவ்வாய்ப்பேட்டை காளியம்மன் கோயிலிலும் குருதேவர் சிறிது நேரம் பார்வையிட வேண்டும். எனவே, அவ்வட்டார மக்களுக்கு அறிவிப்புச் செய்து இத் திட்டங்களைச் செயல்படுத்துங்கள்.

10) இராசிபுரம் வட்டாரத்தில் கோயில்களைப் புத்துயிர்ப்புச் செய்ய கீழே குறித்துள்ள முறைகளைப் பின்பற்ற வேண்டும். நம்மவர்கள் பலராகக் கூட்டமாகச் சென்று கோயில் குளம் அல்லது கிணறிலிருந்து எடுக்கப்பட்ட நீரைக் கலசத்தில் வைத்து அதனுள் சிறிது ஆலிலை, அரச இலை, வில்வ இலை, ... போட்டு அனைவரையும் கலசத்தோடு அமர்ந்து காயந்திரி மந்தரம் 1008 முறை ஓதச் சொல்ல வேண்டும். இடையிடையே எழுந்து கோயிலைச் சுற்றி வந்து மீண்டும் அமர்ந்து காயந்திரி கூறலாம். பூசையின் போது

அனைவர் கைகளிலும் பூ வைத்துக் கொண்டு காயந்திரி கூறச் சொல்ல வேண்டும். பூசை முடிந்தபின் அனைவர் கைகளிலும் உள்ள பூக்களை உள்ளே மூலச் சிலைக்குப் போடச் சொல்ல வேண்டும். கலசங்களிலுள்ள நீரை ஊற்றிச் சிலையை முழுக்காட்டச் செய்ய வேண்டும். இதனைக் கோயில் நிர்வாகத்தினரிடம் சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாகக் கூறிச் செய்க.

கோயிலினுள் ஏதாவது ஓர் இடத்தில் ஆலமரமோ, அரசமரமோ, வில்வமரமோ நட முடிந்தால் கன்று ஊன்றி வைக்கலாம். குருதேவர் வருகையில் தகடு அடியில் வைத்து மந்திரித்து விடுவார். அல்லது வாய்ப்பு இருப்பின் மூலச்சிலைக்கு அடியிலேயே தகடு வைத்துக் கோயிலைப் புத்துயிர்ப்புச் செய்ய முயலலாம். அல்லது குருதேவர் மந்திரித்துத் தரும் திருநீறைத் தூவிக் கூட கோயிலைப் புத்துயிர்ப்புச் செய்யலாம். கோயில் வாசலில் மெய்ஞ்ஞானக்கொடி ஏற்ற வேண்டும். புத்துயிர்ப்புப் பூசையின் போது கருவறைப் புத்துயிர்ப்பு மந்திறம் கூற வேண்டும். அருட்சினை மந்திறம் கூற வேண்டும். கோயில் பூசாறியையே கூறச் செய்தால் மிக நன்று. படையல் பொருட்கள் கறி, மீன் முதலியன வசதியிருப்பின் வெளிப்படையாகப் படைத்துப் பூசை செய்யலாம். இல்லையேல் பத்திரமாக மூடிய பாத்திரத்தில் கொண்டு சென்று கற்பூரம் காட்டுகையில் கருவறை முன் திறந்து காட்டி விட்டுப் பின் மூடி எடுத்து வந்திடலாம்.

இதுபோல், குருதேவர் வருகைக்கு முன் இரண்டு மூன்று முறை பூசை கூட்டு வழிபாடாக நிகழ்த்திட வேண்டும். ஆனால், பொதுமக்களைக் கொண்டே நாம் அனைத்துப் பூசைகளையும் செய்ய வேண்டும். நாம் மட்டும் செய்வதாக இருக்கக் கூடாது. நம்மிடம் வருபவர்களையே கொண்டு கலசநீரெடுத்து முழுக்காட்டக் கொடுக்க வேண்டும். அவர்களையே கொண்டு பூப் போடச் சொல்ல வேண்டும்.

11) சூசைமேரி சமாதைக் கண்டுபிடித்து விட்டால், அங்குள்ளோரிடம் நம்மைப் பற்றித் தெரிவித்து குருதேவர் வருகிறுர், பூசைகள் செய்யப் போகிறுர் எனத் தெரிவித்து விட வேண்டும். வருபவர்களே யெல்லாம் மெழுகுவர்த்தி வாங்கி வந்து ஏற்றி நம்முடன் சேர்ந்து கூட்டாக வழிபாடு நிகழ்த்த ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் நம் பேரில் எவ்விதக் குற்றச்சாட்டும் வந்திடாமல் காத்துக் கொள்ள முடியும்.

12) 1 முதல் 34 வரையுள்ள குருதேவர் அறிக்கைகள் 3 செட்டுகள் கொடுத்தனுப்பப்படுகின்றன. அத்துடன் குருதேவரின் படங்கள் சிலவும் கொடுத்தனுப்பப்படுகின்றன. இரவீந்திரனுக்காக கங்காதரக் குமார் மூலம் இவை அனுப்பப்படுகின்றன. குருதேவர் அங்கு வருகையில் இரவீந்திரன் இதற்கான பணத்தினே ஒப்படைக்க வேண்டும்.

13) சென்னேயிலிருந்து சேலம் மாவட்டச் சுற்றுப்பயணம் வந்து திரும்ப சுமார் 7 பேர் தயாராக இருக்கிறுர்கள். எனவே, தங்கள் விருப்பப்படி, வசதிவாய்ப்புப்படி 5 அல்லது 7 பேர்களுக்குப் பணம் அனுப்புங்கள். குறைந்தது 6 பேருக்காவது அனுப்புங்கள். 7 பேருக்கு மேல் வருபவர்களே அவரவர் செலவு செய்து கொண்டு வரக் கூறுவோம். திரும்பி வருவதற்கான பதிவுப் பயணச் சீட்டுக்களே அங்கிருந்தே செய்து விடுங்கள்.

14) இ.ம.இ.யில் சேருபவர்கள் சன்னிதான உடையணிந்து அ.வி.தி. பணியாற்ற வேண்டிய கட்டாயம் இல்லே. ஆனுல், அவரவர் வீட்டில் சன்னிதான உடையணிந்து பூசைகள் செய்து சித்திகளேப் பெற வேண்டும். இல்லாவிடில் பிற்காலச் சோழப் பேரரசு போல் வீழ்ச்சியடைய நேரிடும். ஆனுல், பொது இடங்களில் இவர்கள் அ.வி.தி. பணியாற்ற வேண்டிய தேவையில்லே. அதாவது சமுதாயத்திலும், அரசியலிலும் தலேவர்களாகவும், தளபதிகளாகவும், செயல்வீரர்களாகவும்,

வழிகாட்டிகளாகவும் உருவாகின்றவர்கள் வாழையடி வாழையாக இருந்துவரும் சமயத் தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும் அநுபவப் பூர்வமாக உணர வேண்டும். இதற்காக அறிவுப் பூர்வமாகவும் (ஏட்டறிவு = Theory), அநுபவப் பூர்வமாகவும் (பட்டறிவு = Practical) ஆரம்பக் காலத்திலிருந்து கற்றும், ஏற்றும், நோற்றும் (நோற்றும் = தக்க குரு வழியாக உணர்தல் => இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்கப்படுதல்.) போற்றிப் பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தரம், திரம், தீரம், வீரம், அறம், மறம், திறம், ... முதலிய அனைத்தும் இல்லாத போலிகள், காலிகள், கூலிகள், கருங்காலிகள், சுயநல வெறியர்கள், சமூக விரோதிகள், சமயத் துரோகிகள், ... முதலியவர்கள் சூழ்ச்சியாகவோ, எதிர்பாராமலோ தலைவர்களாகி ஒரு நூற்றாண்டையே வீணாக்கி விடுவார்கள்.

இப்படித்தான் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் தோற்றுவித்த பிற்காலச் சோழப் பேரரசர்களில் பலரும் காலப்போக்கில் பதினெண்சித்தர்களின் சித்தர்நெறியான சீவநெறியெனும் **மெய்யான இந்துமதத்**தில் ஏட்டறிவும், பட்டறிவும் இல்லாதவர்களாகி விட்டார்கள். அதனால், அவர்கள் அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழியான அமுதத் தெய்வீகத் தமிழ்மொழியில் உள்ள பூசாமொழி வாசகங்களைக் கூறிப் பூசைகளைச் செய்து அநுபவப் பூர்வமாகச் சத்தி சித்திகளைப் பெற முடியாதவர்களாகி விட்டார்கள். எனவே, அவர்கள் பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்களின் *பொய்யான ஹிந்துமதத்*தையே ஏற்றுச் செயல்பட்டிட்டார்கள். அதனால், அவர்கள் அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அமுதத் தெய்வீகத் தமிழ்மொழியை மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும் செயல்பட்டு விட்டார்கள்.

அவற்றின் விளைவாகவே தமிழர்களின் இனப்பற்று, இனஒற்றுமை, இன ஒருமைப்பாடு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, மொழியுரிமை, தன்மானப் பிடிப்பு, இனமான உணர்வு, விடுதலை உணர்வு, ... முதலிய அனைத்தும் சிதைந்து சீரழிந்து நசிந்து அன்னியர்களையே தங்களுடைய தலைவர்களாக, தளபதிகளாக, ஆச்சாரியார்களாக, குருபீடங்களாக, சாத்திரிகளாக, இலக்கியக் கலைஞர்களாக, கலையுலகத் தலைவர்களாக ஏற்றுப் போற்றிடும் அவலக் கேவல நிலைகள் வளர்ந்திட்டன. இன்னும் சொல்லப் போனால், தமிழினத்துக்கு என்று சமயப் பிடிப்போ, சமுதாயக் கட்டுப்பாடோ, அரசியல் உணர்வோ உருவாக முடியாமலேயே போய்விட்டது. **அன்னியர்களுக்கும், அன்னிய மொழிகளுக்கும் அடிமையாகி விட்ட சோழப் பேரரசர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழகத்தில் சமுதாய ரீதியாகவோ, அல்லது அரசியல் ரீதியாகவோ நல்ல பாரம்பரியத் தலைவர்கள் ஏறத்தாழத் தோன்றவே முடியவில்லை என்று கூறத் தக்க அளவிற்கு வரலாறு இருக்கிறது.**

**எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கு என்று உருவாகின்ற தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர், பேச்சாளர், கலைஞர்கள், ... எனப்படும் அனைவரும் கட்டாயமாக அன்றாடம் மெய்யான இந்துமதத்திற்குரிய வழிபாட்டு முறைகளில் மெய்யான பத்தியோடு தூய்மையும், வாய்மையும் உடைய பூசைகளைச் செய்ய வேண்டும். அவரவர் வீட்டிற்குள்ளாவது, குருதேவர் நிகழ்த்தும் நேரடிப் பூசைகளிலாவது சன்னிதான உடையில்லாமல் செயல்பட்டார்கள் என்ற நிலை கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது. ஏனெனில், இ.ம.இ.யின் புரட்சித் தத்துவமும், அருளாட்சி அமைக்கும் செயல் சித்தாந்தமும் முழுக்க முழுக்க மதவழிப் புரட்சியாக, மதவழி மறுமலர்ச்சியாக, மதவழி எழுச்சியாக, மதவழிக் கிளர்ச்சியாக, ... நிகழ வேண்டும், நிகழ வேண்டும், நிகழ வேண்டும், நிகழ்ந்தேயாக வேண்டும் என்பதுதான்.**

**எனவே, இ.ம.இ.யின் முன்னணியில் உள்ளவர்கள் உலகியலாகச் சன்னிதான உடையணியத் தேவையில்லே, செவ்வாடை அணியத் தேவையில்லே என்ற விதிவிலக்கு வழங்கப்பட்டாலும்; சன்னிதானப் பட்டம் பெற்றவர்களாகவும், அன்ருடம் ஒருமுறை சித்தர்நெறிப்படி பூசை செய்பவர்களாகவும், அந்தந்த வட்டாரத்தில் நடக்கும் அமாவாசை வேள்வி, பருவபூசை முதலியவைகளில் கலந்து அருள் பெற்றுக் கொள்பவர்களாகவும், வசதிவாய்ப்புகளுக்கு ஏற்பக் குருதேவரிடம் அணுக்கத் தொண்டு புரிந்து குருதேவரால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள்வழங்கப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதுதான் பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருவாணே**. இதுவே **அருளாட்சி ஆணே**. எனவே, இதனே நம்மவர்கள் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட்டேயாக வேண்டும்.

அதாவது, இ.ம.இ.யும், அ.வி.தி.யும் நமது **மெய்யான இந்துமதத்**தின் இருகண்களாக, இருகைகளாக விளங்கிட வேண்டும். இ.ம.இ. உலகியலாகவும், அ.வி.தி. முழுக்க முழுக்க மதவழியாகவும் செயல்பட்டேயாக வேண்டும். இதுகாறும் தோன்றிட்ட கட்சிகளேப் போல் (கழகம், இயக்கம்) நமது இயக்கமும் விரைந்து வளர வேண்டும், மக்கள் செல்வாக்கைப் பெற வேண்டும், ஆட்சிநிலேகளேப் பெற வேண்டும் என்று யாரும் ஆசைப்பட்டு நமது மதவழிப் புரட்சியை, மதவழிச் சிந்தனேயை, மதவழி அருளாட்சி அமைப்புப் பணியை அச்சத்தாலோ, கூச்சத்தாலோ, இச்சையாலோ குறைத்தும் மறைத்தும் செயலாக்கிடக் கூடாது. எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை.

**குறிப்பு**:- தனிமனிதர்கள் தங்களின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஆதரவாளர்களாகவோ, ஏந்தாளர்களாகவோ இருந்து இ.ம.இ. பணியில் மட்டும் ஈடுபடலாம். ஆனுலும்,, இவர்கள் அ.வி.தி. பணிகளுக்குத் துணேவர்களாகவும், பாதுகாவலர்களாகவும்

இருக்க வேண்டும். **இதுவே அருளாட்சி ஆணை. குவலய குருபீடத்தின் குருவாணை.**

15) குருதேவரின் சேலம் மாவட்டச் சுற்றுப்பயணத்தில் கூடுமானவரை தீச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், கரகம் எடுத்தல், புனித அருட்கலயங்கள் எடுத்துச் செல்லல், ... முதலிய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

**குருதேவர் அருளுரை ஆற்றுவார்.** சித்தரடியான்கள், அடியார்கள் அருட்கணிப்புக்கள் வழங்குவார்கள், அருள் வழங்குவார்கள்.

**இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார்,**
**குவலய குருபீடம், குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார் வருகை.**
**அருளுரை வழங்குகிறார்.**
**பத்தர்கள் அருள்நலம் பெறலாம் வாரீர்,**
**இராசிபுரம், அத்தனூர், அலவாய்ப்பட்டி,**
**வேம்படிதாளம், (நாமக்கல்), ....**

இதன் சாரத்தைச் சுவரொட்டியாக, அறிக்கையாக வெளியிடவும்.

**அருளாட்சி நாயகம், குவலய குருபீடம், 30/11/86**

**குருவாணை.**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
**30/11/86.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது.//**

# இ.ம.இ. - அ.வி.தி. கொள்கை விளக்கம்

செம்பியம்,
11/12/86.

பெறுனர்:-
திரு சு.ஞானசேகரன் பி.ஏ.,
மாட்டுவேலம்பட்டி, பழந்தின்னிப்பட்டி (P.O.)
வெண்ணந்தூர் (வழி), சேலம் (Dt.).

அருள்மிகு பவானியம்மன் சன்னிதானம், சேலம் மாவட்ட இ.ம.இ. செயலாளர்களுள் ஒருவர் திரு ஞானசேகரன் அவர்கள் சமூகத்திற்கு;

தலைவர், குருதேவர், ஞாலுச்சாரியார், குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், அரசயோகி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் விடுக்கும் செயல்நலம் பாராட்டும் திருவோலை:

1) ஏற்கனவே, தங்களிடம் இ.ம.இ. பொறுப்புக்கள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இ.ம.இ.யையும், அ.வி.தி.யையும் இணைக்கத் தேவையில்லை என்று ஆணையிடப்பட்டுள்ளது. அ.வி.தி.யினுல் மக்கள் இ.ம.இ.யையும் சாமியார் கூட்டம், பூசாறிக் கூட்டம், சோதிடர் கூட்டம் என்றெல்லாம் நினைக்க நேரிட்டு விட்டது. ஆனுல், இ.ம.இ.தான் மொழி விடுதலை, இன விடுதலை, பண்பாட்டு விடுதலை, மொழி வளர்ச்சி, சமுதாய விழிப்புணர்ச்சி, தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சி முதலியவைகளையெல்லாம் செய்ய முடியும், செய்ய வேண்டும். ஏனெனில், இந்த நூற்ருண்டில் தோன்றிய அனைத்து விதமான சமய, சமுதாய, அரசியல் இயக்கங்களும், கலைக் கழகங்களும்,

இலக்கியச் சங்கங்களும் தமிழை, தமிழினத்தை, தமிழர் பண்பாட்டை காக்கத் தவறிவிட்டன, காக்கத் தவறிவிட்டன, காக்கத் தவறி விட்டன.

அதாவது தமிழ்நாட்டில் தோன்றிய அனைத்து வகையான இயக்கங்களும், கழகங்களும், மன்றங்களும், ... ஒற்றுமையற்ற தன்மையாலும், கூட்டுமுயற்சி இல்லாமையாலும், தான்தோன்றிப் போக்குகளாலும், சுயநல வெறியாட்டங்களாலும், குறுகிய கண்ணோட்டங்களாலும், அரசியல் இலாபம் தேடிய காரணங்களாலும், தனிமனிதச் சர்வாதிகாரங்களாலும் மாபெரும் தோல்வியையே தழுவியிருக்கின்றன. இவைகள் போலியாகத்தான் மொழியுரிமைக்காகவும், இன உரிமைக்காகவும் போராடியிருக்கின்றன என்ற பேருண்மை தொடர்ந்து தமிழ்மொழியும், தமிழினமும், தமிழ்ப் பண்பாடும், தமிழர் உரிமையும் மாபெரும் தோல்வியை, அடிமை நிலையையே பெற்று இருப்பதால் உணரலாம்.

எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கம் அ.வி.தி. பணிகளின் மூலமாவது தமிழ் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாட்டுப் பிடிப்பு, தன்மான உணர்வு, சுயமரியாதை உணர்வு, இனமான உணர்வு, இன ஒற்றுமை, இன ஒருமைப்பாட்டு உணர்வு, ... முதலிய உணர்வுகளை மறுமலர்ச்சி அடையச் செய்ய முயலுகிறது. ஏனென்றால், மேற்படி உணர்வுகள் ஓரளவு மறுமலர்ச்சியடைந்த போதிலும், பகுத்தறிவு வாதிகளுக்கும், நாத்திக வாதிகளுக்கும், மதமறுப்பாளர்களுக்கும், மதவெறுப்பாளர்களுக்கும், மதவிருப்பாளர்களுக்கும், நம்பிக்கையாளர்களுக்கும் இடையில் நிகழ்ந்த பொருளமைமிகு போட்டாபோட்டிச் சண்டைகளால் வீணாகி விட்டன.

இவற்றிற்கெல்லாம் மேலாக *பொய்யான ஹிந்துமதத்*திற்கும், **மெய்யான இந்துமதத்**திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும், முரண்பாடுகளையும், பகைகளையும் பற்றிய வரலாற்றறிவும், இலக்கிய அறிவும் இல்லாத காரணத்தாலும் நாட்டில்

உருவான அனைத்து வகையான, முளைவிட்ட மறுமலர்ச்சி நிலைகளும் கருகிப் போய்விட்டன, கருகிப் போய்விட்டன, கருகிப் போய்விட்டன.

எனவேதான், 'இ.ம.இ.யின் மூலம் தமிழ்மொழியை அடிப்படையாகக் கொண்டு தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி ஒருமைபாட்டுடன் செயல்பட வைக்கும் முயற்சியும்'; 'அ.வி.தி. மூலம் பதினெண்சித்தர்களின் சித்தர்நெறியான சீவநெறி எனப்படும் (சீவ நெறி -> சிவநெறி -> சைவ நெறி -> சைவ சித்தாந்தம்) **மெய்யான இந்துமத**த்தின் மூலம் தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி ஒருமைப்பாட்டுடன் செயல்பட வைக்கும் முயற்சியும்' மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனைப் புரிந்து கொள்ளாத அ.வி.தி. செயல்வீரர்கள் அருட்கணிப்புச் செய்வது, பூசை செய்வது; மதத் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், இலக்கியங்களையும் பரப்புவது; சன்னிதான உடையில் செயல்படுவது; பதினெட்டு வகைக் காடுகளையும், 48 வகை வழிபாட்டு நிலையங்களையும், 48 வகைக் கருவறைகளையும், 48 வகை வெட்டவெளிக் கருவறைகளையும் புத்துயிர்ப்புச் செய்வதுதான் தங்களுடைய கடமை என்ற குறுகிய வட்டத்துக்குள் செயல்படுகிறார்கள். இது தவறு, தவறு, தவறு. இது திருந்தத் தக்கது அல்லது திருத்தத் தக்கது என்ற கருத்து விளக்கம் பலமுறை தமிழகம் முழுவதும் அனுப்பப் பட்டுவிட்டது. இ.ம.இ.யும், அ.வி.தி.யும் என்ற தலைப்பில் தங்களுக்கே இரண்டு நெடிய அஞ்சல்கள் எழுதப்பட்டு விட்டன. இருந்தும் தங்களிடமே குழப்பம் காணப்படுவதற்கு வருந்துகிறோம்.

'இ.ம.இ. - அ.வி.தி. கொள்கை விளக்கம்' என்ற தலைப்பே இந்த அஞ்சலுக்கும் வழங்கப்படுகின்றது. தங்களை 'இ.ம.இ.யின் மாநிலச் செயலாளர்களுள் ஒருவர்' என்று ஏற்கனவே நியமித்து விட்டோம் என்பதை நினைவுபடுத்துகிறோம். எனவே, **இ.ம.இ.யின் வளர்ச்சிக்காகவும், செயல்நிலைகளுக்காகவும் நீங்கள் எடுக்கின்ற முடிவுகள் இறுதியான முடிவு**. நீங்கள் மாநிலச் செயலாளர்களுள் ஒருவர் என்பதால்

நீங்கள் நேரடியாகவே தலைவர், குருதேவருடன் தொடர்பு கொண்டு அனைத்து முடிவுகளையும் எடுக்கலாம். இதில் தலையிடும் அதிகாரம் யாருக்கும் கிடையாது என்பதை இந்த ஆணையைக் காட்டியே நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்.

எனவே, இனிமேல் அ.வி.தி. நிறுவன நிருவாகச் செயல்வீரர்களைப் பற்றித் தாங்கள் எந்தக் கவலையும் அடையத் தேவையில்லை. நீங்களே சேலம் மாவட்டத்திற்கு இ.ம.இ. தலைவர், இணைத் தலைவர், துணைத் தலைவர், இ.ம.இ. இணைச் செயலர், துணைச் செயலர், இ.ம.இ. பொருளாளர், இணைப் பொருளாளர், துணைப் பொருளாளர், இ.ம.இ. கொள்கை பரப்புச் செயலாளர், இணை கொள்கை பரப்புச் செயலாளர், துணை கொள்கை பரப்புச் செயலாளர் ஆகியோர்களையும் தேர்ந்தெடுத்து நியமித்துக் கொள்ளும் முழு உரிமையும் உங்களுக்கு வழங்கப்படுகிறது. கூடுமானவரை இந்தப் பதவிகளுக்கு அ.வி.தி. செயல்வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படத் தேவையில்லை.

ஏனென்றால், இ.ம.இ.யைச் சேர்ந்தவர்கள் கறுப்பு வண்ண உடையுடுத்தியே (சட்டை, கால்சட்டை, அங்கி, தலைப்பாகை, துண்டு, ... முதலியவைகளில் ஏதாவதொன்றை அல்லது அனைத்தையுமே) அணிந்து செயல்பட வேண்டியவர்களாவார்கள். ஏனெனில், குருதி வண்ணச் சிவப்பாடை, அ.வி.தி.க்கு மட்டுமே உரியது, உரியது, உரியது. இதைக் குழப்ப வேண்டாம். கலக்க வேண்டாம். எனவே, **இந்தக் கடிதத்தைப் படித்தும் பிறருக்குக் காட்டியும் நீங்கள் தனித்து முடிவெடுத்துச் செயல்படலாம், செயல்படலாம், செயல்படலாம்**.

2) இ.ம.இ. பணிகளுக்கு உலகியலாக அ.வி.தி.யின் துணையும், அ.வி.தி.யின் பணிகளுக்கு உலகியலாக இ.ம.இ. துணையும் என்றென்றும் கிடைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஏனெனில், 2000 ஆண்டுகளுக்கு முன்பே; அதாவது 10வது பதினெண்சித்தர் பீடாதிபதி

குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்;

"தமிழ்மொழியையும், இலக்கியத்தையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும் காப்பாற்றும் முயற்சிக்குரிய இருகண்களாக, இருகைகளாக இருப்பவைதான் அல்லது செயல்பட வேண்டியவைதான் இ.ம.இ.யும், அ.வி.தி.யும். இக்கருத்தினைப் புரிந்து தமிழர்கள் இரண்டு அமைப்புக்களையும் தனித்தனியாக வளத்தோடும், வலிவோடும் வளர்த்தேயாக வேண்டும்.

"அப்பொழுதுதான் சமயப் புரட்சியும், சமுதாயப் புரட்சியும் ஒரே சமயத்தில் நிகழ்ந்திட முடியும் அல்லது நிகழ்த்திட முடியும். அப்படி இருபெரும் புரட்சிகளால் படிப்படியாக வளர்க்கப்படுகின்ற பணிகளால்தான் தமிழின ஒற்றுமையும், தமிழ்மொழிப் பற்றும், பண்பாட்டுப் பிடிப்பும், பாரம்பரிய உரிமையுணர்வும் விழிச்சி பெற்றுச் செழிச்சியடையும். அந்தச் செழிச்சியால்தான் *பொய்யான ஹிந்துமதம்* முறியடிக்கப்படும்; தமிழர்களின் அடிமைச் சிந்தையும், போலிப் பண்பும், கூலிப் பண்பும், கங்காணிப் போக்கும், பிறமொழிப் பற்றும் முழுமையாக அகற்றப்பட்டிடும், அகற்றப்பட்டிடும், அகற்றப்பட்டிடும்.

"இக் கருத்தினை உணர்ந்தும், உணர்த்தியும் செயல்படக் கூடிய பாரம்பரிய வீரியமிக்க தமிழ்த் தலைவர்களால்தான் தமிழினம் உய்வடையும், உய்வடையும், உய்வடையும். மெய்யான உயர்வு பெறும், உயர்வு பெறும், உயர்வு பெறும்...."

என்று மிகத் தெளிவாகத் தமது குருபாரம்பரிய வாசகங்களில் கூறுகிறார். எனவே, <u>அன்புகூர்ந்து நமது இ.ம.இ.யைச் சேர்ந்தவர்கள் அ.வி.தி. செயல்வீரர்களின் தவறுகளை எடுத்துக் கூறி வீணான முடக்கங்களையோ, தேக்கங்களையோ, ஒடுக்கங்களையோ, கலக்கங்களையோ, குழப்பங்களையோ வளர்க்க வேண்டாம். இதேபோல், அ.வி.தி.யைச்</u>

சேர்ந்தவர்கள் இ.ம.இ.யைச் சேர்ந்தவர்கள் மீது எந்தக் குறையையும் கூற வேண்டாம். முடிந்தவரை இருவரும் இணைந்து செயல்படுங்கள். முடியாவிட்டால் இருவரும் தனித்தனியே செயல்படுங்கள். ஆனால், எக்காரணம் பற்றியும் இ.ம.இ.க்கும், அ.வி.தி.க்கும் இடையில் போட்டியோ, பொறாமையோ, பகைமையோ, மாறுபாடோ, வேறுபாடோ, முரண்பாடோ ஏற்பட்டுவிடக் கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது. **குருவாணை**.

3) இன்று வரை இ.ம.இ.யைத் தனித்து ஒரு சமுதாய இயக்கமாகவும், அரசியல் மறுமலர்ச்சிச் சித்தாந்தமாகவும், தமிழ்மொழிப் பாதுகாப்பு இயக்கமாகவும், தமிழ்ப் பண்பாட்டு வளவளர்ச்சி இயக்கமாகவும், தமிழ்ச் சமுதாய மறுமலர்ச்சி இயக்கமாகவும், ... தனித்து வளர்க்க முடியாமல் போனது ஒரு மாபெரும் தோல்வியாகும். இதனை நினைவில் கொண்டுதான் அ.வி.தி.யின் தலைமைச் செயலகமாக மதுரை மாவட்டக் கொட்டாம்பட்டியைச் சேர்ந்த காரியேந்தல்பட்டி (மேலூர் வட்டம் காரியேந்தல்பட்டி, கொட்டாம்பட்டி P.O.-625103)யில் உள்ள குருகுலத்தை நியமித்தும்; இ.ம.இ.யின் தலைமைச் செயலகமாக சென்னை செம்பியத்தில் உள்ள குருபீடத்தை நியமித்தும் செயல்பட நேரிட்டுள்ளது.

அதாவது, இ.ம.இ. தலைமைச் செயலகத்திற்கும், அ.வி.தி. தலைமைச் செயலகத்திற்கும் இடையே சுமார் 300 கல் தொலைவு இடைவெளி இருக்குமாறு நன்கு தெளிவாகத் திட்டமிட்டே நமது செயல்நிலைகள் வகுக்கப்பட்டுள்ளன. இருந்தும் நம்மவர்கள் இ.ம.இ.யையும், அ.வி.தி.யையும் இணைத்துப் பிணைத்துக் கலக்கிக் குழப்புவது ஏனோ தெரியவில்லை. அதாவது, இரண்டு அமைப்புக்களும் கட்டாயமாகத் தனித்தனியாகச் செயல்பட்டுத்தானாக வேண்டும். அப்பொழுதுதான் மத மடமைகளை அகற்றும் பணியும், மொழி விடுதலைப் பணியும், இன விடுதலைப் பணியும், பண்பாட்டு விடுதலைப் பணியும், இலக்கிய

மறுமலர்ச்சிப் பணியும், சுயமரியாதை உணர்வுச் செழிச்சிப் பணியும், ... முறையாகவும், நிறையாகவும் வளர்க்கப்பட்டிடும், வளர்க்கப்பட்டிடும், வளர்க்கப்பட்டிடும். இப் பேருண்மையினை அனைவரும் உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படுமாறு இன்று 11/12/86இல் **குருவாணை** வழங்கப்படுகிறது. இதுவே உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கு உரிமை வாழ்வும், பெருமை வாழ்வும், நல்வாழ்வும் தேடித் தந்திடும், தேடித் தந்திடும், தேடித் தந்திடும்.

4) இ.ம.இ. வளர்ப்பது அ.வி.தி.யினரால் இயலாது. எனவே, அ.வி.தி.யினரைப் பயன்படுத்தி இ.ம.இ. வளர்க்க முற்பட வேண்டும். எச்சரிக்கை, **குருவாணை**. இ.ம.இ.க்காக கொள்கை விளக்கக் கூட்டங்கள், தமிழ் இலக்கியக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், **மெய்யான இந்துமதம்** - *பொய்யான ஹிந்துமதம்* பற்றிய கருத்து விளக்கக் கூட்டங்கள்; தந்தை பெரியார் அறிஞர் அண்ணா, மறைமலை அடிகள், திரு வி.க. முதலியவர்கள் ஆற்றியுள்ள பணிகள், தமிழின அரசியல் வரலாறு, இலக்கிய வரலாறு, ... முதலியவைகளை விளக்கிடும் நிகழ்ச்சிகள், ... முதலியவற்றை வளர்த்திடுங்கள்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் இன்றைய சமய சமுதாய அரசியல் நிலைகளைக் கடுமையாக விமரிசிக்க வேண்டாம். அதாவது, நம்மவர்களுடைய சொல்லோ செயலோ எக்காரணம் பற்றியும், யாரையும் புண்படுத்துவதாக அமைந்து விடக் கூடாது. ஏனெனில், நாம் தமிழ்மொழியின் அடிப்படையில் அனைத்து வகையான சமய சமுதாய அரசியல் கட்சிகளையும், அமைப்புக்களையும் ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப்படுத்தி, ஒருமைப்படுத்தி அனைத்து வகையான உரிமை மீட்சிப் பணிகளையும் செய்ய வேண்டும் என்றுதான் இ.ம.இ.யின் அடிப்படைத் தத்துவம்.

எனவே, யாரையும் நிந்திப்பது நமது வேலையல்ல. எல்லோரையும் சிந்திக்கச் செய்வதுதான் நமது வேலை. அப்பொழுதுதான் அவிழ்த்துக்

கொட்டப்பட்ட நெல்லிக்காய் மூட்டையிலிருந்து நாலாபக்கமும் சிதறியோடும் நெல்லிக்காய்களைப் போலிருக்கும் தமிழர்களை ஒற்றுமைப்படுத்த முடியும், ஒருமைப்படுத்த முடியும். இப்பேருண்மையினைத் தங்களைப் போன்றவர்கள்தான் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட வேண்டும். இதை விடுத்துத் தாங்கள் அ.வி.தி.யினரைப் பற்றி அதிகம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டாம். தாங்கள் நேரடியாகவே இ.ம.இ. கிளைகளை உருவாக்குங்கள். அத்துடன் மக்கள் தொடர்புக்காக நமது அ.வி.தி.யினருக்குப் புதிய புதிய அ.வி.தி. கிளைகளை தோற்றுவிப்பதற்கு உதவுங்கள். இதுவே தாங்கள் ஆற்ற வேண்டிய அல்லது செயல்படுத்த வேண்டிய முறையாகும்.

5) தாங்கள் எடுக்கக் கூடிய முடிவுகளை அவ்வப்போது தலைமைப்பீடத்திற்கு, குருதேவருக்குத் தெரிவியுங்கள். இந்த முறை 1986ஆம் ஆண்டு டிசம்பர் 24 முதல் 28 வரை திட்டமிடப்பட்டுள்ள சுற்றுப்பயணத்தை அ.வி.தி.யினருடன் சேர்ந்து திறமையாக நடத்திக் கொடுங்கள். இனிமேல் தாங்கள் இ.ம.இ.க்கு என்று தனித்துச் சுற்றுப்பயணங்களை ஏற்பாடு செய்யுங்கள். அதில் கட்டாயமாகக் குருதேவரும் மற்ற சன்னிதானங்களும் கருப்பு வண்ண ஆடையில் முழுக்க முழுக்கச் சமுதாயக் கண்ணோட்டத்திலும், அரசியல் கண்ணோட்டத்திலும் செயல்படுவார்கள், செயல்படுவார்கள், செயல்படுவார்கள்.

குருதேவர் சன்னிதான உடையில் அ.வி.தி. பணிகளிலும், கருப்பு வண்ண ஆடையில் இ.ம.இ. நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார். கவலை வேண்டாம். நமது அ.வி.தி. செயல்வீரர்கள் அனைவருக்கும் பொதுமேடைகளில் இ.ம.இ. கொள்கை விளக்கப் பணிகளை ஆற்றத் தயாராக இருக்கிறார்கள். எனவே, தாங்கள் எவ்விதத் தயக்கமுமின்றி நமது சன்னிதானங்களுக்கு கருப்பு வண்ண ஆடையில் இ.ம.இ.

கொள்கை விளக்கப் பேச்சாளர்களாகச் செயல்படுமாறு அழைக்கலாம். இதேமுறையில்தான் இம் மாநிலம் முழுவதும் இ.ம.இ. வளர்க்கப்பட்டாக வேண்டும். இதற்காகத் தாங்கள் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய முற்பட்டால் அது பெரிதும் வரவேற்கப்படும்.

நம்மைச் சார்ந்த அனைவரும் உங்களுடைய துணையோடும், செயல்திட்டங்களோடும் இ.ம.இ. பணியில் ஈடுபடுவார்கள் என்ற உறுதிமொழி தங்களுக்கு வழங்கப்படுகிறது. தாங்கள் தங்களுடைய தந்தையாரைப் போன்று சமுதாயத் துறையிலும், அரசியல் துறையிலும் மிகப்பெரிய அரிய சாதனைகளைச் சாதித்தேயாக வேண்டும். தங்களுடைய மொழிப்பற்றும், இனப்பற்றும் காட்டில் காய்ந்த நிலவாகவோ அல்லது பாலைவனத்தில் பெய்த மழையாகவோ வீணுகி விடக் கூடாது, வீணுகி விடக்கூடாது, வீணுகி விடக் கூடாது. இந்த அருளார்ந்த அறிவுரையை அன்பு கூர்ந்து புரிந்தும் புரியவைத்தும் செயல்படுங்கள்.

6) இன்றுவரை சேலத்திற்கு வருவதற்குரிய புகைவண்டிப் பயண அனுமதிச் சீட்டு (Reserved tickets) கிடைக்கவில்லை. இங்கேயே இந்த நிலையென்றால், அங்கே சேலத்திலிருந்து சென்னை திரும்புவதற்குப் பயணச் சீட்டு கிடைக்குமா? கிடைக்காதா? என்பது சந்தேகமாக இருக்கிறது. எனவே, யாம் மீண்டும் நாளைக்கு பயணச் சீட்டு பெற முயன்று பயணச் சீட்டுப் பெறும் தேதியை எழுதுகிறோம். அதன்பிறகே, நீங்கள் விளம்பரங்களைச் செய்யலாம். யாம் திரும்புவதற்குரிய தேதியை நிர்ணயித்து சேலம் to சென்னை டிக்கட் பதிவு செய்யலாம். எனவே, வேம்படிதாளம் வந்து சனிக்கிழமை இரவு 9 மணிக்கு மேல் டிரங்கால் செய்து (Trunk Call) டிக்கட் பதிவு செய்யப்படுவது பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

7) இதுவரை நாமக்கல்லிலிருந்து எந்தவிதமான அழைப்பும் வராத காரணத்தால் இந்தச் சுற்றுப்பயணத்தில் நாமக்கல் செல்லவில்லை யாம். எனவே, தாங்கள் வேம்படிதாள நண்பர்களோடும், இராசிபுரத்து

நண்பர்களோடும் கலந்து பேசி எமது சுற்றுப்பயண ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இனிமேல் நிகழப் போகும் சுற்றுப்பயணங்களில் தாங்கள் இ.ம.இ.க்கு என்றே தனித்து ஏற்பாடு செய்யுங்கள் அல்லது அ.வி.தி.யோடு கலந்து உங்களுக்கு ஒத்து வந்தால் அ.வி.தி.யோடு சேர்த்து ஏற்பாடு செய்யுங்கள். இல்லையேல் அ.வி.தி. சுற்றுப்பயணம் தனித்து நிகழட்டும்.

8) நண்ப! தாங்கள் இ.ம.இ.க்காக சேலம் மாவட்டம் முழுவதும் அமைப்புக்களை நிறுவினால் யாம் இப்பயணத்தைத் தொடர்ந்தோ அல்லது சென்னை திரும்பியதுமோ விரைந்து மீண்டும் சேலம் சுற்றுப்பயணம் வருவோம். மேலும், இ.ம.இ.க்காக நமது சன்னிதானங்களில் பேச்சாற்றல் உள்ளவர்களைத் தங்களுடன் சேர்ந்து இ.ம.இ. கிளைச் சொற்பொழிவிற்காக அனுப்புகிறோம். தங்கள் விருப்பம் போல் பட்டு வேட்டி, முழுக் கால்சட்டை, கருப்பு சிவப்பு மேல்சட்டை, ... முதலியவைகளுடன் வருகிறோம். தங்களின் விருப்பப்படி கருத்துப் பரிமாற்றம், விவாதம், பட்டிமன்றம், சொற்பொழிவு, ... முதலிய அனைத்தும் நிகழ்த்துகிறோம். ஆங்காங்கே தமிழ்மொழியில் ஆர்வமும், விருப்பமும், புலமையும் உடையவர்களை ஒன்றுதிரட்டி ஊழியர் கூட்டம் போடுவோம். நீங்கள் சந்திக்க விரும்பும் எல்லாவகையான மனிதர்களையும் சந்தித்து உரையாடுவோம். கவலை வேண்டாம். எல்லோருடனும் கலகலப்பாகக் களிப்போடு கலந்து செயல்படுங்கள். எல்லோரும் உங்களை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் செயல்படுங்கள்.

9) நீங்கள் எவ்வளவுதான் இ.ம.இ.யில் செயல்பட்டாலும் கட்டாயமாக அன்றாடம் நடந்து கொண்டோ, வண்டியில் போய்க் கொண்டோ அல்லது வேறு வேலைகளைச் செய்து கொண்டோ சிவபுராணத்தை ஒருமுறை முழுமையாக ஓத வேண்டும். இதேபோல், அன்றாடம் காயந்திரி மந்தரம், மந்திரம், அருட்சினை மந்திறம் முதலியவைகளைக்

குறைந்தது 8 முறையாவது ஓத வேண்டும். இதனைச் செய்து உங்களை அருளாளராக உருவாக்கிக் கொண்டே தீர வேண்டும். இல்லாவிட்டால், இ.ம.இ.யில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் உங்களால் செயல்பட முடியாது. அதாவது, அருளை அநுபவப் பொருளாக வழங்குகின்ற வல்லமையைப் பெற்ற அருளாளர்களால்தான் அருளாட்சி அமைப்புப் பணியில் முன்னணியில் நின்று செயல்பட முடியும். இல்லாவிட்டால், பிற்காலச் சோழப் பேரரசிற்கு வீழ்ச்சி ஏற்பட்டது போல் தங்களுக்கும் ஏற்பட்டிடும். அருளாட்சிப் பணியில் செயலிழக்க நேரிடும். புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

**திருவோலை நாயகம்:**
சுந்தரானந்தா,
11/12/86.

**அன்பு**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்,**
**12/12/86.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் ஏ. இரவி அவர்களின் கையெழுத்திலும், சித்தரடியான் இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்திலும் இருந்தது.//**

# திருவோலை

குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருதேவர் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் 31.12.86இல் தமது கைப்படச் சித்தர் மகன் அருட்செல்வன் ஞானசேகரன் அவர்கள் சமூகத்துக்கு விடுக்கும் **திருவோலை**.

1) வாழ்க நீவிர்! வளர்க நும் தொண்டு! நுமது முயற்சி விளைவிக்கும் வெற்றிகள் நாளும் பெருகட்டும். நுமது கனவுகள் நனவாகட்டும்! அருளுலகத்தாரின் பாதுகாப்பு நிலைக்கட்டும்.

2) அன்பு மைந்த! நும்மால் உள்ளத்துச் சிக்கல்களையோ, இல்லத்துச் சிக்கல்களையோ தனித்துச் சமாளிக்கப்பட்ட நிலை மாறட்டும்! ஏமாற்றம் முழுமையாக அகலட்டும்!

3) ஆற்றல்மிகு செல்வ! நுமது அறிவும் உழைப்பும் இன்று எம்மிடம் வரும் வரை முழுமை பெறவில்லை. இப்பொழுது இப்பிறப்பும் இனி வரும் பிறப்பும் முழுமையுறும் பொற்காலம் துவங்கியுள்ளது. மயக்கம் ஏன்? தயக்கம் ஏன்? கலக்கம் ஏன்? கவலை ஏன்?

4) அருட்செல்வ! அக இருளையும், புற இருளையும் அகற்றும் உரிமையும், நெடிய பெரிய பாரம்பரியப் பீடும் ஆற்றலும் பெற்றுள்ளோம் யாம். எம்மால் எவருக்கும் எள்முனையளவு கூடப் பாதிப்பில்லை. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமென்றே வாழுகிறோம்.

5) இம்மண்ணுலகம் 500 கோடி ஆண்டில் காணும் 12வது அருளாட்சி நாயகமே யாம். எமது ஏட்டறிவு, பட்டறிவு, கடலோடிக் காடோடி நாடோடி வாழ்வின் நற்பயன்கள், ... முதலிய அனைத்தையும்

உலக மக்களுக்கு வாரிவாரி வழங்கும் பணியில்தான் ஈடுபட்டுள்ளோம் யாம். இதில் பங்கு பெறுவது கிடைத்தற்கரிய பெரிய வாய்ப்பு. இதனை மறுக்கவும் மறக்கவும் முயல வேண்டாம்.

6) விண்ணையும் மண்ணையும் இணைக்கும் இந்தப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியோடு இணைந்திடு. எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன் அருளே! நீங்கள் ஒரு கருவிதான், சாதனம்தான், இயந்திரம்தான். உங்களை இயக்குவது எல்லாம் வல்ல சித்தர்நெறியே!

7) இனியும் யாம் விளக்கத் தேவையில்லை! யோகம் தானாக வரும்போது வீணாகப் புறக்கணிக்க வேண்டாம். எல்லாப் பிறப்பிலும் மகிழும் பேரின்ப வாய்ப்பை ஏற்றிடுக! மற்றவை எமது இயக்கத்தவர் வழி அறிக! உணர்க! **குருவாணை!**

**அருளாட்சி நாயகம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**
**31/12/86.**

*கங்காதரக் குமாருக்கு,*

*இத்துடன் வரும் குருதேவர் கைப்பட எழுதிய கடிதத்தை திரு ஞானசேகரன் (மாட்டுவேலம்பட்டி) அவர்களிடம் நேரில் தரவும்.*

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தா அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

11வது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் வழங்கிய

# குருவாசகம் தொகுப்பிலிருந்து ஒரு சில வாசகங்கள்.

√ உழவுத் தொழிலால் பொருளீட்டுபவன் என்றுமே ஏமாற்றுக்காரனுகவோ, வஞ்சகனுகவோ, பேராசைக்காரனுகவோ மாற மாட்டான். பொருளே வாங்கி விற்கும் வணிகனே பேராசைக்காரனுகவும், பொருமைக்காரனுகவும், வஞ்சகனுகவும், ஏமாற்றுக்காரனுகவும் மாறுகிருன். அதனுல்தான், உழவன் ஒருவேளை தொழுதால் போதும். வணிகன் ஆறு வேளை தொழுதாலும் போதாது என்று பதினெண்சித்தர்கள் கூறுகிருர்கள்.

√ பதினெண்சித்தர்கள் உழவர்களின் உடல்கள் இறைமையணுக்கள் வாழும் இடங்களாகின்றன. வணிகர்களின் உடல்கள் இறைமையணுக்கள் நடந்து செல்லும் சாலைகளாகின்றன என்று கூறுகிருர்கள்.

√ பதினெண்சித்தர்கள் உழவர்களைத் தொல்லைப்படுத்தும் நோய்களும், பேய்களும் எண்ணிக்கைக்கு உரியன. ஆனுல், வணிகர்களைத் தொல்லைப்படுத்தும் நோய்களும், பேய்களும் எண்ணிறந்தவை என்று கூறுகிருர்கள்.

√ பதினெண்சித்தர்கள் இறைமையணுக்களைத் தன்னுள் பெற்றிடாது மனிதனுக இறந்திடும் உழவர்களை எண்ணிடலாம். ஆனுல், இறைமையணுவைத் தன்னுள் பெற்ற மனிதனுக மாறி இறந்திடும் வணிகர்களைத்தான் எண்ணிட முடியும் என்று கூறுகிருர்கள்.

√ பதினெண்சித்தர்கள் **நாடு காக்கும் அரசனும், அமைச்சரும், படையினரும் உழவுத்தொழில் செய்பவர்களாகவே இருக்க வேண்டும்; இல்லாவிட்டால், நாட்டுப் பற்றின்றிப் பொருள் நாட்டம் கொண்டு அனைத்தையும் மாற்ருர்க்கு விற்கும் நிலை ஏற்பட்டிடும்** என்று கூறுகிருர்கள்.

**// குருதேவர் அவர்கள் வழங்கிய 'குருவாசகம் - முதற்பகுதி' என்ற நூலில் உள்ள சில பத்திகள். //**

“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”
- குருபாரம்பரிய வாசகம்.



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் (கி.பி.785 - 1040).

அம்மையப்பர்



11வது பதினெண்சித்தர் பீடாதிபதிக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam Trust,** (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org
Email: indhuism@gmail.com